**எனது இல: D5 / சார்ஜன்ட்/பரீட்சை/2024**
**சிறைச்சாலைகள் தலைமையகம்,**
**கொழும்பு 09.**
2026.02.11

அனைத்து சிறைச்சாலை அத்தியட்சகர்கள் மற்றும்,
உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர்கள்.

**<u>சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சார்ஜன்ட் பதவிக்கு பதவி உயர்த்துவதற்கான எழுத்துப் போட்டிப் பரீட்சை - 2026</u>**

இந்தத் திணைக்களத்தில் நிலவுகின்ற சிறைச்சாலை சார்ஜன்ட் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2024.12.31 ஆம் திகதிக்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள அலுவலர்களிடமிருந்து (பெண்/ஆண்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 33.33% இதன் மூலம் நிரப்பப்படவுள்ளதோடு, அதன் பிரகாரம் 113 ஆண் பதவிகளுக்கும் மற்றும் 06 பெண் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளன. தேர்ந்தொடுக்கப்படவுள்ள எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி நியமன அலுவலரினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிட எண்ணிக்கையொன்றை அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்புவதற்கு நியமன அலுவலருக்கு அதிகாரம் உள்ளது. இந்தப் பரீட்சை பரீட்சைகள் ஆணையர் நாயகம் அவர்களால் 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

- விண்ணப்பப் படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளமான www.donets.lk இல் "Our Services" என்பதன் கீழுள்ள " Online Applications – Recruitment Exams/ E.B.Exams" என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளதோடு விண்ணப்பங்களை நிகழ்நிலையில் (Online) மாத்திரம் சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் 2026 பெப்ருவரி மாதம் 25 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதோடு 2026 மார்ச் மாதம் 25 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.

- அலுவலர்கள் விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தங்களது தனிப்பட்ட பெயர் வழிக்கோப்பில் உட்சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் கையளித்தல் வேண்டுமென்பதோடு, நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது நிறுவனத் தலைவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றையும் மற்றும் சேவை உறுதிப்படுத்தல் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கமைய விண்ணப்படிவத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை சிறைச்சாலைகள் தலைமையகத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

- ❖ விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் இறுதித் தினம் வரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதன் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களை விண்ணப்பதாரிகளே ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

02. இது தொடர்பாக அலுவலர்களுக்கு அறிவித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

03.

1. சம்பள அளவுத்திட்டம் - 54000 -9X 670 - 17X890 -75160 (RS-2-2025 PS)
2. வினைத்திறன் காண் தடைப்பரீட்சை - நியமனம் பெற்று 03 ஆண்டுகளினுள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்..
3. பூர்த்தி செய்ய வேண்டிய அடிப்படைத் தகைமைகள்:

I. நியமனம் நிரந்தரம் செய்யப்பட்டிருத்தல்.

II. பதவி உயர்வுக்கான தகைமை பெறுகின்ற திகதிக்கு (2024.12.31) சிறைக்காவலர் தரத்தில் குறைந்தபட்சம் எட்டு (08) வருட சேவைக்காலத்தை பூரணப்படுத்தியிருத்தல் மற்றும் உரிய அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்.

III. உரிய வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் குறித்த திகதியில் சித்திபெற்றிருத்தல்.

IV. தகைமை பெறுகின்ற திகதிக்கு (2024.12.31) நேர் முன்னரான (08) ஆண்டுகளினுள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல்.

V. தொடர்புடைய மட்டத்தில் ஏனைய அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் (அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் . PSC/EST/03-05/04/2021 ஆம் இலக்க மற்றும் 2023.04.12 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுகின்ற தினமாகும் போது ஏனைய அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்)

VI. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் அதன் இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின் விதிகளின் பிரகாரம் ஒழுக்காற்று தண்டனையொன்றைப் பெறாதிருத்தல்

**04. திருப்திகரமான சேவைக்காலம் என்பது :**

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் XVII ஆம் அத்தியாயத்தின் 236(I) பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டியிருந்த வருடாந்த சம்பள ஏற்றங்கள் சட்டமுறையான காரணங்களுக்காக நிறுத்திவைக்கப்பட்டு, குறைக்கப்பட்டு, அல்லது பிற்போடப்பட்டுள்ள ஏதேனும் காலப்பகுதி இருப்பின் அதுவும், குற்றங்கள் தொடர்பிலான முதலாவது

அட்டவணையின் கீழ் தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றமொன்றைப் புரிந்துள்ள போது அத்தகைய தவறு இழைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருட காலப்பகுதியும், மற்றும் குற்றங்கள் தொடர்பிலான இரண்டாவது அட்டவணையின் கீழ் தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றமொன்றைப் புரிந்துள்ள போது அத்தகைய தவறு இழைக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதியும், திருப்திகரமான சேவைக் காலத்தை கணக்கிடும் போது நீக்கப்படல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் XVII ஆம் அத்தியாயத்தின் 236(II) பிரிவின் பிரகாரம், தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் குற்றங்கள் தொடர்பான முதலாவது அட்டவணையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்று தொடர்பில் தண்டனை பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவர் அத்தகைய தவறு இழைக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து வருட (05) காலப்பகுதியும், தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தில் குற்றங்கள் தொடர்பான இரண்டாவது அட்டவணையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்று தொடர்பில் தண்டனை பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவர் அத்தகைய தவறு இழைக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வருட (02) காலப்பகுதியும், தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25.2 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குறுகிய ஒழுக்காற்று நடவடிக்கை முறையின் கீழ் ஒழுக்காற்று தண்டனையொன்றைப் பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவர் அத்தகைய தவறு இழைக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதியும் கழியும் வரை ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறன் (சேவை அனுபவம்) பிரிவுகளின் கீழ் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் வழங்கப்படுகின்ற தர உயர்விற்குத் தகைமையற்றவராகக் கருதப்படல் வேண்டும்

05. **பதவி உயர்வு வழங்கும் முறை** : பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலானவர்கள் பரீட்சையில் பெற்றுக்கொண்ட உயர்ந்த புள்ளிகளின் தொடரொழுங்கில் தேவையான அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சித்துப் பார்க்கும் நேர்முகப்பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவதோடு அதன் மூலம் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற சிறைக்காவலர் அலுவலர்கள் மாத்திரம் (மேலே III ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம்) சார்ஜன்ட் பதவிக்கு பதவி உயர்த்தப்படுவார்கள். இதன் மூலம் காணப்படுகின்ற வெற்றிடங்களில் 33.33% நிரப்படும்.

06. பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும் என்பதோடு விண்ணப்பிக்கப்படுகின்ற மொழிமூலத்தை பின்னர் மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

07. **பரீட்சைக் கட்டணம்:**

- ❖ பரீட்சைக் கட்டணம் ரூபா 600/= ஆகும். பரீட்சை கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை முறையில் வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டண முறைகளின் கீழ் மாத்திரம் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்

i. எந்தவொரு வங்கியினதும் கடன் அட்டைகள் மூலம் (Any Bank Credit Card)

ii. இணையம் மூலம் கொடுப்பனவு செய்ய முடியுமான எந்தவொரு வங்கி வரவு அட்டை மூலம் (Any Bank Debit Card With the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)

iv. எந்தவோர் இலங்கை வங்கி கிளை மூலம் (Any Branch of the Bank of Ceylon)

**குறிப்பு:-**

(அ) மேற்குறித்த முறைகள் மூலம் கட்டணம் செலுத்தும் முறை தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையதளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தியொன்றிக் மூலம் அறிவிக்கப்பப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத்தொகையும் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படுகின்ற தவறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளக்கொடுப்பனவு செய்யப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

08. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியான

விண்ணப்பமொன்றாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது முறைமையினுள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தைப் பூரணப்படுத்தும் போது அந்த அறிவுறுத்தல்களை அவதானமாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்றைப் பெற்றுக்கொண்ட பின்னர் அதில் செய்யப்படுகின்ற எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமொன்றாகக் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. முழுமையற்ற விண்ணப்ப படிவங்கள் அறிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

09. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்துதல் வேண்டும்இதற்காக . பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் செல்லுபடியாகும்.

- தேசிய அடையாள அட்டை
- செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
- செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அதேபோன்று பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளத்தகவாறு முகம் மறைக்கப்படாதவாறும் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளக்கூடியவாறு இரண்டு காதுகள் மறைக்கப்படாதவாறும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு மறுக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரையில் முகம் மற்றும் இரண்டு காதுகள் மறைக்கப்படாதவாறு இருத்தல் வேண்டும்.

**10. பரீட்சைக்கான பாடத்திட்டம்:**

| விடய இல | வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திபெறத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 01 | சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம் மற்றும் சிறைச்சாலைத் திணைக்கள நிலையியற் கட்டளைகள் | அனைத்துப் பிரிவுகளும். | 02 மணித்தியாலங்கள் | 100% | 40% |
| 02 | மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் (பொது அறிவு எதிர்பார்க்கப்படும்) | • மனித உரிமைகளின் வரலாறு மற்றும் அதன் வளர்ச்சி<br>• அடிப்படை உரிமைகள் மற்றும் இலங்கையில் அவற்றின் செயற்பாடுகள்<br>• கைதிகளுக்கான குறைந்தபட்ச வசதிகள் வழங்குதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்டுள்ள தரநிலைகள் (விதிகள்) | 01 மணித்தியாலம் | 100% | 40% |

- வினாத்தாள்கள் பல் தேர்வு, சுருக்க எழுத்து மற்றும் பகுதியளவு கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும்.

11. விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற கணிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அல்லது அந்த தினத்திற்கு முன்னர், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் பரீட்சை அனுமதி அட்டைகள் நிகழ்நிலையில் மாத்திரம் விநியோகிக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றி இணைய (வெப்) அறிவித்தல் மூலம் /விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் அது குறித்து விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரர் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தை இணைய (வெப்) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அனுமதி அட்டையைப் பரீட்சித்துப் பார்த்து ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு விண்ணப்ப படிவத்திற்கமைய குறித்த திருத்தங்களைச் செய்து கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில்/நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்களுக்காகச் செய்யப்படுகின்ற கோரிக்கைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

12. பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலேயே கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்குப் பரீட்சை அனுமதியட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்றுள்ளார் அல்லது அந்தப் பதவிக்கான தகமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படக் கூடாது.

13. பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்கள் விதிக்கப்படுகின்ற சட்ட விதிகளுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இந்த விதிகளை மீறும் பட்சத்தில், பரீட்சைகள்

ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர்கள் உட்படுவதற்கு நேரிடும் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

14. நியமன அலுவலரினால் பெறுபேறுகளை வெளியிடுவதற்குப் பொருத்தமான தினம் அறிவித்தனுப்பப்பட்டதன் பின்னர் எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற புள்ளிகள்/மொத்த புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேறுகள் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சாரத்திகளுக்கும் தபால் மூலம் அனுப்பிவைப்பதற்கு அல்லது www.results.exam.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

15. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தல்களுக்கு இடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படுமாயின், அவ்வாறான சந்தர்ப்பமொன்றின் போது சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கமைவாக அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.

**எச்.எம்.என்.சீ. தனசிங்க**
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் (ப.க)